எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளையெல்லாம் மக்கள் துணைகொண்டு நாங்கள் வெற்றிபெறுவோம். ஏனென்றால், மக்களுக்கு தேவையான திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K.**பழனிசாமி** அவர்கள்

©
தமிழ்நாடு அரசு
2019

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019-2020

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண்.28

**கடம்பூர் ராஜு**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**

## மானியக் கோரிக்கை எண்: 28
## செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 5 |
| 2 | ஒளிப்படப் பிரிவு | 14 |
| 3 | மேற்கோள் பிரிவு | 16 |
| 4 | நினைவகங்கள் | 18 |
| 5 | அரசு விழாக்கள் | 32 |
| 6 | கள விளம்பரம் | 47 |
| 7 | விளம்பரம் | 52 |
| 8 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 54 |
| 9 | திரைப்படத்துறையினர் நலவாரியம் | 60 |
| 10 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 65 |
| 11 | எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 71 |
| 12 | திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு | 76 |
| 13 | தமிழரசு | 82 |
| 14 | பொருட்காட்சிப் பிரிவு | 88 |
| 15 | மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 94 |
| 16 | சென்னை – மாநிலச் செய்தி நிலையம் | 96 |
| | நிறைவுரை | 99 |

**“சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது”   (குறள்–647)**

## முன்னுரை

தமிழகம் வளம் பெறுவதையும், தமிழக மக்கள் நலம் பெறுவதையும் தனது ஒரே குறிக்கோளாகக் கொண்டு **மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களது வழியில், தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்கள் பற்றியும், வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மக்களிடம் எடுத்துக்கூறி, அதன் பயன்களை அவர்கள் முழுமையாகப் பெறுவதை உறுதி செய்கின்ற ஒருமித்த உணர்வோடு தமிழ்நாடு அரசின் செய்தித்துறை திறம்பட செயலாற்றி வருகிறது.

இந்தியத் திருநாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலும், வெளிநாட்டு அரசுகளும் தங்களது பிரதிநிதிகளை தமிழ்நாட்டுக்கு அனுப்பி திட்ட செயல்பாடுகளை அறிந்து கொள்ளும் வகையிலும், புதுமைத் திட்டங்களையும் முன்னோடித் திட்டங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்தார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களது மறைவுக்குப் பின், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள், சீர்மிகு திறத்துடன் அத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதுடன், புதிய சிந்தனைகளுக்கு ஆக்கமும்,

வடிவமும் தந்து, தமிழகத்திற்குத் தேவையான பல புதிய திட்டங்களை, அரசின் அனைத்துத் துறைகளின் மூலமாக செயல்படுத்தி வருகிறார்.

தமிழக மக்கள் வளம் பெற வகை செய்யும் இத்திட்டங்களை குறித்தும் அதன் மூலம் படைக்கப்படும் சாதனைகளை குறித்தும், மக்களிடம் கொண்டு செல்லும் மகத்தான பணியை, சொலல் வல்லனாய், சோர்விலனாய், செய்தி மக்கள் தொடர்புத்துறை செயலாற்றி வருகிறது.

இந்த அரிய பணியை இத்துறையைச் சார்ந்த, செய்தி வெளியீட்டுப் பிரிவு, ஒளிப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, விழாக்கள் பிரிவு, களவிளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, திரைப்படத்துறையினர் நலவாரியம், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், தமிழரசு, செய்தி நிலையங்கள், மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் என அனைத்து பிரிவுகளின் வாயிலாக செய்தி மக்கள் தொடர்புத்துறை சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் செய்தி வெளியீட்டுப் பிரிவு, சென்னை தலைமைச் செயலகத்தில் இருபத்து நான்கு மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இந்த பிரிவுதான் செய்தித் துறையின் இதயமாக விளங்குகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் செய்திக் குறிப்புகள், செய்தி வெளியீடுகள், அரசினுடைய அனைத்துத்துறை சார்ந்த அறிவிப்புகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விவரங்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள் மற்றும் அரசு சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்பான அனைத்துச் செய்திகள், காணொலிக் காட்சிப்பதிவுகள் மற்றும் வண்ணப் புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் மின்னஞ்சல் வாயிலாக, நாளிதழ்கள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள், இணையதளச் செய்தி நிறுவனங்கள்,தொலைக்காட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட **325**க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு நாள்தோறும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

தலைமையிடத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிக் காட்சிப்பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும், அதிநவீன முறையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் **www.tndipr.gov.in** வலைதளத்தில் உடனுக்குடன் அதிவேக முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஊடகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

மாவட்டங்களில் நடைபெறும் மிக முக்கிய அரசு விழாக்கள் மற்றும் அரசு சார்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அதிநவீனத் தொழில் நுட்பத்தில் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டு, அவை அடுத்த சில நொடிகளில் ஒளிபரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமையிடத்திலிருந்து அவ்வப்போது வெளியிடப்படும் அரசின் முக்கிய அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான செய்தி வெளியீடுகள் ஆகியவற்றை மாவட்டப் பதிப்புகளில் வெளியிட ஏதுவாக, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் வாயிலாக, உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் முக்கியநிகழ்ச்சிகள்,விழாக்கள்மற்றும்அரசுநிகழ்ச்சிகள்குறித்த செய்திகள், புகைப்படங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வெளியிடுவதோடு அவைகள் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக சென்னை தலைமையிடத்தில் பெறப்பட்டு, சென்னையிலிருந்து வெளியாகும் அனைத்து நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் இப்பிரிவின் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் செய்தியாளர் சந்திப்பு, மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள்

பங்கேற்கும் அரசு விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளை செய்தியாளர்கள் எளிதாக சேகரிக்கும் வகையில் ஊடகப்பிரிவினருக்குத் தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் ஒருங்கிணைப்புப் பணியை இச்செய்தி வெளியீட்டுப் பிரிவு செய்து வருகிறது.

**பத்திரிகையாளர் நலன்**

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

அனைத்து பத்திரிகையாளர்களின் நலன்களைப் பேணி பாதுகாப்பதில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பங்கு மிகவும் மகத்தானது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்று நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற கடந்த 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு, 5,000 ரூபாயாக இருந்த ஓய்வூதியமானது, மூன்று முறை உயர்த்தப்பட்டு, 8,000 ரூபாயாக வழங்கப்பட்டு வந்தது. கடந்த 21.09.2017 அன்று அம்மா வழியில் நடக்கும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களால் நான்காவது முறையாக இவ்வோய்வூதியம் உயர்த்தப்பட்டு, தற்பொழுது மாதம் 10,000 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக, மொத்தம் 196 பத்திரிகையாளர்களுக்கு மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து பத்திரிகையாளர்களும் ஓய்வூதிய பலனை முழுமையாக பெற வேண்டும் என்பதற்காகவும், இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பத்திரிகையாளர்கள் பயன்பெற்றிடவும்

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பானது, 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டதுடன், பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் பெற்று வந்த ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பானது, 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிகையாளர்கள் மறைவுக்குப்பின்பு, அவர்களின் குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு 2,500 ரூபாயாக இருந்த குடும்ப ஓய்வூதியத்தை, மூன்று முறை உயர்த்தி 4,750 ரூபாயாக வழங்கி வந்தார்கள். அம்மா அவர்களின் வழி நடக்கும் இந்த அரசு, இதனை மேலும் உயர்த்தி, 21.09.2017 அன்று முதல் பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம் மாதம் 5,000 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக, 38 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துவோர் ஆகியோர்

பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நேரத்தில், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி **30.7.2018** முதல் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

| **பணிபுரிந்த ஆண்டுகள்** | **குடும்ப உதவி நிதித் தொகை** |
|---|---|
| 5 | ரூ. 75,000/– |
| 10 | ரூ. 1,50,000/– |
| 15 | ரூ. 2,25,000/– |
| 20 | ரூ. 3,00,000/– |

**நல நிதியம்**

பத்திரிகையாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் வகையில் உருவாக்கப்பட்ட மற்றுமொரு முத்தான திட்டம் தான் பத்திரிகையாளர் நலநிதியம் என்பது ஆகும். இதற்கென நிரந்தர நிதியாகத் 'தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்' ஒரு கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையின் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித் தொகையிலிருந்து பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதி உதவி வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்சமான தொகை ரூ.**50,000**ஆக இருந்ததை **1.8.2018** முதல் ரூ.**1.00** இலட்சமாக உயர்த்தி வழங்கிட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

## அரசு வாடகைக் குடியிருப்பு

பத்திரிகைத்துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில் சென்னை மற்றும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளில் குறைந்த வாடகையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## வீட்டுமனை வசதி

மாவட்டங்களில் பணியாற்றி வரும் செய்தியாளர்களுக்கு சொந்த வீடோ அல்லது வீட்டு மனையோ இல்லாத நிலையில், மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் மாவட்டங்களில் பணியாற்றும் செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சியில் பணிபுரிபவர்களுக்கு சலுகை விலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

## செய்தியாளர் அங்கீகார அட்டை

மாண்புமிகு முதலமைச்சர் பங்கேற்கும் அரசு விழாக்கள் மற்றும் மிக முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கு சென்று, செய்திகள் சேகரித்திட ஏதுவாக, நாளிதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

## செய்தியாளர் அட்டை

செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று கட்டுரைகள், வரலாற்று விவரங்கள், செய்திகளின்

பின்னணி ஆகியவை குறித்த உண்மைத் தன்மையினை அறிந்து, செய்திகள் வெளியிட ஏதுவாக, காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பாண்டில் **865** செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டன.

## செய்தியாளர்களுக்கான கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை

செய்தியாளர் அங்கீகார அட்டை பெற்றுள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் சென்னை மற்றும் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்திட, ஆண்டுதோறும் ‘கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை’ வழங்கப்பட்டு வருகிறது. அதே போன்று அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், செய்தியாளர்களுக்குக் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. **2017–2018**ஆம் நிதியாண்டில் **3,916** செய்தியாளர்களுக்கு **1.81** கோடி ரூபாய் செலவில் கட்டணம் இல்லா பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

## செய்தி முகமைகள்

இந்திய பத்திரிகையாளர் சங்கம் (PTI) இந்திய ஐக்கியச் செய்திகள் முகவரமைப்பு (UNI) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் மாண்புமிகு ஆளுநர் அலுவலகம், செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம் ஆகிய இடங்களில் கணினி வாயிலாக, **24** மணி நேரமும் பெறப்படுகின்றன. நாடு தழுவிய மிக முக்கியச் செய்திகள் உரிய நடவடிக்கைகளுக்காகத் துறைத் தலைவர்களின் கவனத்திற்கு உடனுக்குடன் அனுப்பப்படுகின்றன.

## செய்தி மக்கள் தொடர்புத்துறை வலைதளம்

ஊடகங்கள் மற்றும் நாளிதழ்களின் பயன்பாட்டிற்கென்றே செய்தி மக்கள் தொடர்புத்துறையால் **www.tndipr.gov.in** என்னும் முகவரியுடன் அதிநவீன வலைதளமானது உருவாக்கப்பட்டு, மிகச்சிறந்த முறையில், நிமிடத்திற்கு நிமிடம் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் காணொலிக்காட்சிப் பதிவுகள் அனைத்தும் அதிவேகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஊடகங்கள் தங்களுக்குத் தேவையானவற்றை உடனே பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வலைதளம் உலகெங்கிலுமுள்ள தமிழர்களும், பொதுமக்களும் தமிழகத்தின் அன்றாட நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளப் பெரிதும் பயன் தரும் வகையில் சிறந்த வலைதளமாக உள்ளது என்றால் அது மிகையில்லை.

### ஊடக மையம்

இத்துறையின் மற்றுமொரு அங்கமான, ஊடக மையம் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இம்மையம் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த மையத்தில் 16 தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் மற்றும் அரசு சார்பான செய்திகளும் பதிவு செய்யப்படும் வகையில் இயங்கி வருகிறது. அதே போன்று, தலைமைச் செயலகத்திலிருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் அனைத்தும் ஊடக மையத்திலிருந்து சென்னையில் உள்ள

அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுவதோடு, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்த மாவட்டப் பதிப்புகளில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அந்தந்த மாவட்டங்களில் வெளியான செய்தி விவரங்கள் யாவும் (Feedback) மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களால், ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்திலுள்ள இம்மையத்திற்கு 'மின் அஞ்சல்', 'கட்செவி' (WhatsApp) வாயிலாக தவறாமல் அனுப்பப்படுகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியன மாவட்ட நாளிதழ்களிலும் சரிவர வெளியிடப்படுகின்றனவா என்கிற விவரங்களும், இம்மையத்தின் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

# ஒளிப்படப் பிரிவு

அரசு விழாக்களில் முக்கிய நிகழ்வுகளை ஒளிப்படம் எடுத்து, நாளிதழ்களுக்கும் ஊடகங்களுக்கும் வழங்கும் அரசின் ஒளிப்படப்பிரிவு, சென்னை தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவின் வாயிலாக, எடுக்கப்படும் ஒளிப்படங்கள், இணையதள வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் மூலம் நாளிதழ் மற்றும் ஊடகங்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகின்றன. முக்கிய நிகழ்வுகள் தொடர்பான ஒளிப்படங்கள் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்திலும், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

தலைமைச் செயலக ஒளிப்படப்பிரிவின் வாயிலாக எடுக்கப்படும் அரசின் அனைத்துத் துறை சார்ந்த முக்கிய நிகழ்வுகள் குறித்த ஒளிப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிப்பதிவுகள் (videos) எதிர்காலத் தேவையினைக் கருத்தில் கொண்டு, குறுந்தகடு மற்றும் நிலைவட்டுகளில் (Hard Disk) ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன.

**30.09.2018** அன்று சென்னையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாள் விழாவில் சிறப்பான முறையில் அமைக்கப்பட்ட ஒளிப்படக் கண்காட்சி பொதுமக்களின் பாராட்டுக்களை பெற்றது.

வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு, அதிநவீன ஒளிப்படக்கருவிகளைக் கொண்டு டிஜிட்டல் முறையில் ஒளிப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மேலும், ஒளிப்படங்கள் அனைத்தும் நவீன முறையில், வரலாற்று ஆவணங்களாக, பாதுகாத்திடும் உயரிய பணியை, ஒளிப்படப்பிரிவு மேற்கொண்டு, சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

# மேற்கோள் பிரிவு

நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை துறைவாரியாக, பல்வேறு இனங்களாகப் பிரித்து, நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் மேற்கோள் பிரிவு, சென்னை தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வருகிறது.

காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளி மாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பார்வைக்காக, அனுப்பி வைக்கப்படுகின்றன. இப்பணிகள் தினந்தோறும் அதிகாலையிலேயே தொடங்கப்பட்டு, விடுமுறை ஏதுமின்றி, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல, நாளிதழ்கள், பருவ இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்திகள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும், நாள்தோறும் மேற்கோள் பிரிவால் அனுப்பப்படுகிறது.

நாளிதழ்களில் துறைகள் குறித்து வெளிவரும் முக்கியச் செய்திகள் ‘உள்ளறி’ (Scan) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுக்கு நாள்தோறும் காலையில் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்செய்திகள் குறித்து உடனுக்குடன் அத்துறை செயலாளர்களின் கைப்பேசிக்கு குறுஞ்செய்திகளாகவும், ‘கட்செவி’ (WhatsApp) மூலமும் அனுப்பப்படுகின்றன.

முக்கிய நாளிதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) முறையாகத் தொகுக்கப்பட்டு, எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், தேவைக்கேற்பவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச்செயலாளர்கள் உள்ளிட்ட துறை அலுவலர்கள் ஆகியோரால் கேட்கப்படும்போது உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மேலும், பழைய நாளிதழ்கள், நவீன மின்னணு முறையில் எண்மம் (Digital) செய்யப்படுகின்றன. மேற்கோள் பிரிவில் பராமரிக்கப்படும் நாளிதழ்களின் முக்கியச் செய்திகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் சாதனைகள், வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட அனைத்துச் செய்தி நறுக்குகளும், நாளிதழ்களின் தலையங்கங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

## நினைவகங்கள்

அன்னைத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுத் தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்நாட்டுக்குப் பெருமையினைத் தேடித்தந்த பெருமக்கள் ஆகியோரது நினைவுகளைப் போற்றியும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, தியாகங்கள் பல புரிந்து, தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகளைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தகைய பெரியோர்களின் அருமை பெருமைகளை இன்றைய தலைமுறையினரும் அறிந்து பயனடையும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், 69 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுச்சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் அவை பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**தமிழகத்திற்கு பெருமை சேர்த்த பெரியோர்களை பெருமைப்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால், 2018–2019ம் ஆண்டில் சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதில் ஒரு

நூலகமும் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதில் ஒரு நூலகமும் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருகில் உள்ள கோழியாளம் கிராமத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதில் ஒரு நூலகமும் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன் புதூரில் திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதில் ஒரு நூலகமும் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களுக்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மணிமண்டபம் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தை 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அதே வளாகத்தில் ஒரு நூலகமும் அமைக்க பொதுப்பணித்துறையிடம் திட்ட மதிப்பீடு கோரப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தை 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், ஒரு நூலகமும் அமைக்க பொதுப்பணித்துறையிடம் திட்ட மதிப்பீடு கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 08.03.2019 அன்று “1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்துப் போராடி தங்கள் இன்னுயிரை ஈந்த பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 16 பேர்களை கௌரவிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் ஆனதை குறிக்கும் வகையிலும், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பெருங்காமநல்லூரில் ஒரு நினைவு மண்டபம் தமிழ்நாடு அரசால் கட்டப்படும்” என அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, நினைவு மண்டபம் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் நினைவகங்கள்

| வ. எண் | நினைவகங்கள் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம் | ரூபாய் 50 கோடியே 80 இலட்சம் | மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. |
| 2 | மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா வாழ்ந்த சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள "வேதா நிலையம்" இல்லத்தை அரசு நினைவிடமாக மாற்றுதல் | ரூபாய் 32 கோடி | "வேதா நிலையம்" இல்லம் அமைந்துள்ள நிலத்தினைக் கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 3 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் | ரூபாய் 1 கோடியே 34 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 4 | இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம், மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் | ரூபாய் 2 கோடியே 15 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று நினைவு மண்டபம் திறக்கும் தருவாயில் உள்ளது. |

**2018–19ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள்:**

| வ. எண் | மணிமண்டபம் / கலையரங்கம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | இசை மேதை நல்லப்பசுவாமி நினைவுத் தூண், விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம் | ரூபாய் 20 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 2 | பாரத மாதா நினைவாலயம், பாப்பாரப்பட்டி, பென்னாகரம் வட்டம், தருமபுரி மாவட்டம் | ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |

**2018–19ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள்: நினைவகங்களில் முடிவுற்ற பணிகள்**

| வ. எண் | மணிமண்டபம் / கலையரங்கம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | வள்ளுவர் கோட்டம், சென்னை | ரூபாய் 85 இலட்சம் | புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. |
| 2 | மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபம், நெற்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம் | ரூபாய் 50 இலட்சம் | சீரமைப்புப் பணி நிறைவு பெற்றுள்ளது. |

இது தவிர, தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா நினைவகம் (ஈரோடு), மூதறிஞர் இராஜாஜி இல்லம் (கிருஷ்ணகிரி), பிஷப் கால்டுவெல் இல்லம் (திருநெல்வேலி), தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் (நாகப்பட்டினம்), கோபால் நாயக்கர் மணிமண்டபம் (திண்டுக்கல்), பெருந்தலைவர் காமராசர் இல்லம் (விருதுநகர்), முத்து மண்டபம் (வேலூர்) மற்றும் காந்தி நினைவு மண்டபம் (கன்னியாகுமரி) ஆகிய நினைவகங்களில் உள்ள **110** பழைய புகைப்படங்களை ரூ.**4.99** இலட்சம் செலவில் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விவரம்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா புரட்சிதலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் (ம) புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலை சாலை, தியாகராயநகர், சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, சென்னை |
| 14 | சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம் | இராயபுரம், சென்னை |
| 15 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 16 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 17 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 18 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 19 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 20 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 21 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 22 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 23 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 24 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 25 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 26 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 28 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 29 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 30 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 31 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 32 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 33 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| 34 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 35 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 36 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 37 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 38 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 39 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 40 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 41 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 42 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 43 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 44 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 45 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 46 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 47 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 48 | வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 49 | சுதந்திரப்போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 50 | சுதந்திரப்போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 51 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 52 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 53 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 54 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 55 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 56 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 57 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 59 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 61 | சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 62 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 63 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 64 | விடுதலைப் போராட்டவீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 65 | மாமன்னர்கள் ஹைதர் அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம் | அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் |
| 66 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 67 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 68 | சுவாமி சகஜானந்தா மணி மண்டபம் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| 69 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். |

## அரங்கங்கள்

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | “வெள்ளையனே வெளியேறு” இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

## நினைவுச் சின்னம்

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2019 ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபம்**

ஒரு கோடியே **50** இலட்சம் ரூபாய் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், கொண்டையம் பாளையம் கிராமம், மஜரா வையம்பாளையம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கடந்த **06.02.2019** அன்று பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காக தங்களது இன்னுயிரைத் துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழகம். அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை வழியில் அடிமை விலங்கை தகர்த்தெறிந்த தியாகச் செம்மல்கள் வலம் வந்த மாநிலம் என்ற பெருமையும் பெற்றது நம் தமிழகம்.

தமிழகத்தின் அத்தகைய தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ் அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்து அவர்களது தியாகங்களையும் பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் வகையில் அவர்களது பிறந்த நாள் விழாக்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்மிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்று அன்னாரது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்துகின்றனர். சென்னை மாவட்டத்தில் 32 தலைவர்களுக்கும், மாவட்டங்களில் 55 தலைவர்களுக்கும் அவர்களின் பிறந்த நாளில் பல்வேறு இடங்களில் அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

## சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 19 | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல் |
| 8 | ஏப்ரல் 27 | சர் பிட்டி தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 9 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 10 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 11 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன்<br>பிறந்த நாள் விழா |
| 12 | ஜூன் 26 | சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்<br>பிறந்த நாள் விழா |
| 13 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன்<br>பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன்<br>பிறந்த நாள் விழா |
| 15 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர்<br>பிறந்த நாள் விழா |
| 16 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 17 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி சங்கரலிங்கனார் |
| 18 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி செண்பகராமன் |
| 19 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன்<br>வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 20 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 21 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார்<br>பிறந்த நாள் விழா |
| 22 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 23 | செப்டம்பர் 27 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழா |
| 24 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 25 | அக்டோபர் 1 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள் விழா |
| 26 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 27 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 28 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 29 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 30 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 31 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 32 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

## மாவட்டங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | காமராஜர் சாலை, சென்னை |
| 4 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 5 | ஜனவரி 19 (தை 5–ம் தேதி) | காலிங்கராயன் அவர்கள் ராஜவாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள் விழா | காலிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 8 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 9 | பிப்ரவரி 8 (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 10 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 11 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 12 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 13 | பிப்ரவரி 24 | புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 14 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 15 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 16 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 17 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 18 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 19 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம். |
| 20 | ஏப்ரல் 19 சித்ரா பௌர்ணமி | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம் |
| 21 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 22 | மே 10 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 23 | மே 10 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 24 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 25 | மே 31 | சுதந்திரப் போராட்டவீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள் விழா | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 26 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 27 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 28 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 29 | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 30 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள்விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 31 | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 32 | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் விழா | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 33 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 34 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 35 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | திருமலை சாலை, தியாகராயர் நகர், சென்னை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 36 | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 37 | ஜூலை 31 | சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 38 | ஆகஸ்ட் 2 மற்றும் 3 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 39 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 40 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 41 | ஆகஸ்ட் 20 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் பிறந்த நாள் விழா | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 42 | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 43 | செப்டம்பர் 2 (ஆவணி 16) | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 44 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 45 | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 46 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 47 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | அண்ணா சதுக்கம், சென்னை மாவட்டம் |
| 48 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 49 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 50 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 51 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரளா மாநிலம் |
| 52 | செப்டம்பர் 25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 53 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | காந்தி மண்டபம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 54 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 55 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 56 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 57 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 58 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்தி மண்டபம், சென்னை மாவட்டம் |
| 59 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 60 | அக்டோபர் 23 | அமுத கவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 61 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 62 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |
| 63 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 64 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என். ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 65 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 66 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 67 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம் |
| 68 | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |

**2017 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால் அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படும் விழாக்கள்**

திருப்பூர் குமரன் பிறந்த இடமான சென்னிமலையில் கொடிகாத்த குமரன் பிறந்த நாள் விழா (அக்டோபர் 4).

திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவலில், விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்தநாள் விழா (செப்டம்பர் 2, ஆவணி 16).

சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திர போராட்ட வீரருமான திரு.ராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்த நாள் விழா (செப்டம்பர் 16).

திரு.சிவாஜி கணேசன் அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவையை போற்றிடும் வகையில் அவர்களின் பிறந்த நாள் விழா (அக்டோபர் 1).

சேலம் மாவட்டம், சேலம் மாநகரில் அமைந்துள்ள பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் மணிமண்டபத்தில் அவர்களின் பிறந்த நாள்களான முறையே ஜனவரி 17 மற்றும் பிப்ரவரி 24 ஆகிய தேதிகளில் அரசு விழா.

சென்னையில், சிலம்புச் செல்வர் திரு.ம.பொ.சிவஞானம் அவர்களின் பிறந்த நாள் விழா (ஜூன் 26).

சென்னையில், திரு.சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்த நாள் விழா (செப்டம்பர் 27).

சென்னையில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த நாள் விழா (ஜூலை 11).

தேனி மாவட்டத்தில், கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பிறந்த நாள் விழா (ஜனவரி 15).

ஈரோடு மாவட்டத்தில், திரு.காலிங்கராயன் அவர்கள் ராஜவாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாளை போற்றுகின்ற வகையில் தை 5 ஆம் தேதி அன்று அரசு விழாவாக கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா**

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா **30.06.2017** அன்று மதுரையில் தொடங்கி மற்ற மாவட்டங்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டு நிறைவு விழா **30.09.2018** அன்று சென்னையிலும் மிக பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் **02.05.2017** அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் விதமாக இந்திய அஞ்சல் துறை மூலம் அன்னாரின் நினைவாக **30.09.2018** அன்று அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. மேலும், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ் என்றென்றும் நிலைத்திடும் வகையில் சென்னை காமராஜர் சாலையில் **1.52** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களால் **27.02.2019** அன்று திறந்து வைக்கப்பட்டது.

## அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

திருவள்ளுவர் பிறந்த தினமான தைத்திங்களில், ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று, தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் செய்தித்துறை இணைந்து திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்கு 'திருவள்ளுவர் விருது', 'தந்தை பெரியார் விருது', 'பேறறிஞர் அண்ணா விருது', 'அண்ணல் அம்பேத்கர் விருது', 'பெருந்தலைவர் காமராஜர் விருது', 'மகாகவி பாரதியார் விருது', 'பாவேந்தர் பாரதிதாசன் விருது', 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது' மற்றும் 'கி.ஆ.பெ. விசுவநாதம் விருது' உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு, பெருமைப்படுத்தப்படுகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் அரசின் ''இரண்டு ஆண்டுச் சாதனை விழா'' **15.02.2019** அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# கள விளம்பரம்

தமிழகத்தின் குக்கிராமங்களில் உள்ள மக்களும் அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப்படுத்தப்படுவதையும், தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, கள விளம்பரப் பிரிவு என்னும் புதிய பிரிவு முதன் முதலாக 2013ஆம் ஆண்டு செய்தித் துறையில் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டது.

## மின்னணு விளம்பரத் திரை வீடியோ வாகனம்

இப்பிரிவின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வண்ணம் நவீன தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத்திரை பொருத்திய 32 புதிய மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள், பகல், இரவு மற்றும் அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தினையும், குக்கிராமம், கிராம ஊராட்சி, பேரூராட்சி,

நகராட்சி மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட எந்தப் பகுதியில் மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனம் வாயிலாக விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் ‘புவிதிசைச்சுட்டி’ (GPS) வாயிலாக, கண்காணிக்கும் பணிகளும், இக்கள விளம்பரப் பிரிவு வாயிலாகத் திறம்பட மேற்கொள்ளப்படுகின்றன.

## மின்னணு விளம்பரத் திரைகள்

பொது மக்கள் அதிக அளவில் நாள்தோறும் வந்து சென்றிடும் இடங்களான 32 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள 10 அம்மா உணவகங்கள், 3 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் அகண்ட திரை வசதியுடன் கூடிய ‘மின்னணுத் திரை’ (LED Screen) நிறுவப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களின் தொகுப்பு கொண்ட குறும்படங்கள் தொடர்ந்து திரையிடப்பட்டு, மக்கள் அறிந்திடும் வகையில் களவிளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## அலுவலர்களின் பணி மதிப்பீடு

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, செய்தியாளர் கூட்டங்கள் நடத்துதல், செய்தியாளர் பயணங்கள் ஏற்பாடு செய்தல், நாளிதழ்களில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், திரையரங்குகளில் அரசின் செய்தி

மலர் திரையிடுவதை ஆய்வு செய்தல், சிறப்பு வெளியீடுகள் பிரசுரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மாதந்தோறும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அவர்களின் பணிகளை மாதந்தோறும், தலைமையிட உயர்மட்ட அலுவலர்களைக் கொண்ட தனிக் குழுவினரால் தரமதிப்பீடு செய்வதன் பயனாக, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளில் எவ்வித சுணக்கமும் ஏற்படாதவாறு, மாவட்டங்களில் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவும், ஏனைய பிற மாவட்டங்களோடு ஒப்பீடு செய்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எளிமையாக எய்திடவும், புதிய உத்வேகத்தோடு பணியாற்றிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## புத்தாக்கப் பயிற்சி

ஆண்டுதோறும் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் மாவட்டங்களில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி மற்றும் விளம்பரம்) ஆகியோருக்குப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் **20.02.2019** மற்றும் **21.02.2019** ஆகிய நாட்களில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேர்ந்த அனுபவம் கொண்ட அலுவலர்கள், நெறியாளர் மற்றும் மனவளக்கலை நிபுணர் ஆகியோரின் வாயிலாக, அரசுப் பணியில் புதிய நடைமுறைகள், பணித்திறனை மேம்படுத்திடப் புதிய உத்திகள், நல் ஆளுமைப் பயிற்சி உள்ளிட்டவை இப்புத்தாக்கப் பயிற்சியில் பயிற்றுவிக்கப்பட்டன. மேலும் அனைவருக்கும் மனவள கலைப்பயிற்சி (Stress Management) வழங்கப்பட்டது.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (The protection of Children from Sexual offenses (Pocso) Act, 2012) என்ற போக்ஸோ சட்டத்தின் கீழ் குழந்தைகளை பாதுகாக்க சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய போக்ஸோ கமிட்டி மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ஒட்டுவில்லைகள் (Stickers), துண்டு பிரசுரங்கள் (Pamphlets), குறும்படம், குறும்பாடல்கள், சுவரொட்டிகள் (Wall posters), ஆகியவற்றின் வாயிலாக விழிப்புணர்வு விளம்பரப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான உலகளாவிய இலக்குகளை விளம்பரப்படுத்துதல்

2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை 2030ஆம் ஆண்டிற்குள் எட்டவேண்டிய இலக்குகள் தொடர்பாக 17 நிலையான உலகளாவிய இலக்குகளை அறிவித்தது.

அவை, ஏழ்மை இன்மை; பசி இன்மை; நல்ல ஆரோக்கியம்; தரமான கல்வி; பாலின சமத்துவம்; தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்; புதுப்பிக்கத்தக்க மற்றும் மலிவான எரிசக்தி; தரமான பணிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி; தொழில், கண்டுபிடிப்பு மற்றும் அடிப்படை வசதி; ஏற்றத்தாழ்வை குறைத்தல் உள்ளிட்ட 17 இலக்குகள் ஆகும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை பிற அரசு துறைகளுடன் இணைந்து மேற்கூறிய ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான உலகளாவிய இலக்குகளை, செய்தி வெளியீடுகள், அரசு பொருட்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள், தமிழரசு மாத இதழ் ஆகியவற்றின் வாயிலாக விளம்பரம் செய்வதற்கும், விளம்பரப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

# விளம்பரம்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் இத்துறை வெளியிட்டு வருகின்றது.

அனைத்துத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக இத்துறை செயல்பட்டு வருகிறது.

விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டுபோய் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

கூடுதல் செலவு ஏதுமின்றி நவீன மின்னணு தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில், ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் தேசியத் தகவல் மையத்தின் (NIC) வழியாக **www.tenders.tn.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேவைப்படுவோர் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றியும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிர்ணயித்துள்ள கட்டணங்களில், விளம்பரங்களாக பத்திரிகைகளிலும் இலவசமாக இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிர்வாகம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றிப் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்**

பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.50 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

உலக அளவில் காண முடியாத அற்புதங்கள் மற்றும் தமிழ் கலாச்சாரம், தமிழர் பண்பாடு ஆகியவற்றை உலகம் முழுவதும் எடுத்துச்செல்லும் ஊடகமாக தமிழ்த் திரைப்படங்கள் திகழ்கிறது. தமிழ்நாடு அரசின் சார்பில், சமுதாயச் சிந்தனைகளுடன் கூடிய சிறந்த கலைப்படைப்புகளையும், மனித நல்லுணர்வுகளையும் வெளிப்படுத்தும் தரமான திரைப்படங்களை தயாரித்திட ஊக்கப்படுத்திடும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய விருதுகளைப் பெற்றிடத் தகுதியானவர்களை தேர்வு செய்திடும் பொருட்டு, தமிழக அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினரால் தேர்வு செய்யப்பட்டுப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசாக 75 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், பெண்களை வெகு உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப்பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) என, திரைப்படத் துறையில் சாதனை புரிந்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு, சான்றிதழ் ஆகியன வழங்கப்படுகின்றன.

சிறந்த முழுநீளத் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு 2009 முதல் 2014ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விரைவில் நடைபெறவிருக்கும் விழாவில் இந்த விருதுகள் அனைத்தும் வழங்கப்படவுள்ளன.

2015ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகளுக்கு தேர்வுக்குழு தலைவராக மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.பி.கலையரசன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு திரைப்பட விருதுகளுக்கு வரப்பெற்ற திரைப்படங்களை பார்வையிட்டு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

கலைத்துறையில் எழுத்து, நடிப்பு, சினிமா என பல்துறைகளிலும் சாதனை படைத்த பேரறிஞர் அண்ணா, சமூக சீர்திருத்தக் கருத்துக்களால் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், கலை உலகத்தினரை தனது வசீகரக் குரலால் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், பன்முக ஆற்றலுடன் விளங்கிய நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் மனங்களில் இதய தெய்வமாக போற்றப்படுகிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., கலை உலகில் உயர்ந்த நிலையில் மகுடம் சூடிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், ஏழை எளிய மக்களின் நலனே தன் நலன் என கருதிய தங்கத் தாரகை அம்மா ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் ‘கலைத்துறை வித்தகர் விருதுகள்’ தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

## அரசு திரைப்பட மானியம்

நல்ல கருத்துக்களை தெரிவிக்கும் வகையிலும், சமுதாய விழிப்புணர்ச்சியுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும்

வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்ப் படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் 7 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுகளில், குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் தலா ரூ.7 இலட்சம் வீதம் 10 கோடியே 43 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 20.06.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்கள்.

## சின்னத்திரை விருதுகள்

இல்லத்தரசிகளின் பொழுதுபோக்கில் மிகப் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், குறுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூ.2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.1 இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு உள்ளிட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் என சின்னத்திரைத் துறையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 3 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா 1 இலட்சம் ரூபாய் ரொக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சின்னத்திரையில் 2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ள சிறந்த தொடர்கள் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கான விருதுகள், ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விரைவில் நடைபெறவிருக்கும் விழாவில் இத்தொகை வழங்கப்படவுள்ளது.

## இந்திய சினிமா நூற்றாண்டு விழா மற்றும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்த்திடும் வகையில், இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் நடத்திட ஏதுவாக, இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு அரசின் சார்பில், இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கினார்கள். இந்திய சினிமா நூற்றாண்டு விழா சென்னையில் கடந்த 21.09.2013 முதல் 24.09.2013 வரை வெகு விமரிசையாக நடைபெற்றது.

சென்னையில் பல்வேறு காலக் கட்டங்களில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தமிழக அரசின் சார்பில் 4 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற 12வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.10 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலம் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் உயரிய நோக்கிலும், அவர்கள் வளமுடன் வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்திலும், தமிழ்நாடு அரசு சார்பில், திரைப்படத் துறையினர் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சீரிய கட்டுப்பாட்டில் சிறப்புடன் செயலாற்றி வருகிறது. பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் நலவாரியம் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நலவாரியத்தில், **39** சங்கங்களைச் சார்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். இந்நலவாரியத்தில் இதுவரையில், **21,611** நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித் தொகை |
|---|---|---|
| **அ.** | **கல்வி உதவித் தொகை** | |
| 1 | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| 2 | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| 3 | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 ரூபாய் |
| 4 | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்) | 1,500 ரூபாய் |
| 5 | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) | 1,500 ரூபாய் |
| 6 | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,750 ரூபாய் |
| 7 | முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 ரூபாய் |
| 8 | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 3,000 ரூபாய் |
| 9 | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 ரூபாய் |
| 10 | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 ரூபாய் |
| 11 | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 ரூபாய் |
| 12 | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 6,000 ரூபாய் |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித் தொகை |
|---|---|---|
| 13 | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,000 ரூபாய் |
| 14 | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,200 ரூபாய் |
| ஆ | திருமண உதவித் தொகை | 2,000 ரூபாய் |
| இ | மகப்பேறு உதவித் தொகை | 6,000 ரூபாய் |
| ஈ | கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித் தொகை | 3,000 ரூபாய் |
| உ | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 ரூபாய் |
| ஊ | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்** | |
| 1 | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1 இலட்சம் ரூபாய் |
| 2 | விபத்தினால் ஏற்படும் உடல் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 ரூபாய் முதல் 1 இலட்சம் ரூபாய் வரை |
| எ | இயற்கை மரணம் உதவித்தொகை | 15,000 ரூபாய் |
| ஏ | ஈமச் சடங்கு உதவித் தொகை | 2,000 ரூபாய் |

நலவாரியத்தால் வழங்கப்படும் திட்டத்தின் மூலம் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையை சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களில் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை விவரங்கள் ஆண்டு வாரியாகப் பின்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | 38 | 1,98,000/– |
| 2 | 2013 | 728 | 21,39,000/– |
| 3 | 2014 | 303 | 8,00,000/– |
| 4 | 2016 | 277 | 8,00,250/– |
| 5 | 2017 | 259 | 9,41,500/– |
| 6 | 2018 | 449 | 13,61,250/– |
| | மொத்தம் | 2,054 | 62,40,000/– |

**01.01.2018** முதல் **31.12.2018** வரை உறுப்பினர்களிடமிருந்து நலத்திட்ட உதவிகள் கோரி பெறப்பட்ட **205** விண்ணப்பங்கள் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு **ரூ.7,20,000/–** நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர் / செயலராகவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்பட்டுள்ள பிற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

## அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர், வணிகவரித்துறை ஆணையர், உள்துறை துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் நலத்துறை ஆணையர், நில நிருவாகத்துறை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் ஆவர்.

## அலுவல் சாரா உறுப்பினர்கள்

திருவாளர்கள் ஆர்.வி.உதயகுமார் (இயக்குநர்), பி.வாசு (இயக்குநர்), லியாகத் அலிகான் (வசனகர்த்தா), மோகன் காந்திராமன் (இயக்குநர்), ராமராஜன் (நடிகர்), டி.கே.கலா (நடிகை மற்றும் பாடகி), புஷ்பா கந்தசாமி (தயாரிப்பாளர்), நாஞ்சில் பி.சி.அன்பழகன் (இயக்குநர்) மற்றும் செல்வி. எல்.ஆர்.ஈஸ்வரி (திரைப்படப் பின்னணிப் பாடகி) ஆகிய திரைத்துறை சார்ந்த வல்லுநர்கள் வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களாக உள்ளனர்.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் இக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

## செய்தி படப்பிடிப்பு

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து, அவற்றைத் தொகுத்து பொது மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் செய்தி மலராக தயாரித்து வெளியிடும் பணி, விரிவான கள விளம்பரப் பணி ஆகியவற்றை தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## திட்டங்கள், சாதனைகள் குறித்த செய்தி மலர்கள், கருத்து விளக்கப்படங்கள், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள்

2016–ம் ஆண்டு முதல் இதுநாள் வரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டங்கள் குறித்து 59 வீடியோ செய்தி மலர்கள், கருத்துவிளக்கப்படங்கள், அரசின் நலத்திட்டங்கள் குறித்த குறும்படங்கள், விழிப்புணர்வு குறும்படங்கள் மற்றும் 32 குறும்பாடல்கள் தயாரிக்கப்பட்டு, தமிழகத்தின் அனைத்து டிஜிட்டல் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டன. மேலும், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட அனைத்து நிகழ்ச்சிகளும் தொகுக்கப்பட்டு தலைமை செயலகத்தின் ஊடக மையத்தின் வழியே வீடியோ செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

**வார செய்தித் தொகுப்புகள்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளையும், மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் செய்தித் தொகுப்புகளாக தயாரித்து குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து வாரந்தோறும் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள எல்.இ.டி. டிவி ஆகியவற்றிக்கும் அனுப்பப்பட்டு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விரிவான கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**படக்காட்சி செய்தி மலர்கள்:**

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணியாக தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய படக்காட்சி செய்தி மலர்களைத் தயாரித்து அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகளில் வெளியிடுவது மற்றும் குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் அனுப்பி, பொதுமக்கள் கூடும் இடங்களில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக அதிநவீன வீடியோ வாகனங்கள் மூலமாகக் கள விளம்பரப் பணியைச் செய்து வருகிறது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு (State of the Art of Technology) படக்காட்சி செய்தி மலர்களை LED திரைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு, அனைத்து மக்கள் கூடும் அரசு அலுவலகங்களிலும், அம்மா உணவகங்களிலும் திரையிட்டு மக்கள் அரசின் நலத் திட்டங்கள் அறிந்து பயனடையும் வகையில் ஒளிபரப்பட்டு வருகிறது.

**குறும்படங்கள் 2018–2019:**

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு பல்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வு குறும்படங்களை தயாரித்து வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில்:

| வ. எண் | குறும்படங்கள் |
|---|---|
| 1 | நானும் பள்ளிக்கூடம் போகணும் |
| 2 | நீரின்றி அமையாது உலகு |
| 3 | பிளாஸ்டிக் மாசினை ஒழிப்போம் |
| 4 | நாடாளுமன்றத் தேர்தல் |

## கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட படக்காட்சி செய்தி மலர்கள் மற்றும் குறும்பாடல்கள் விவரம்

| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 1 | ஒக்கி புயல் |
| 2 | நீராபானம் |
| 3 | சரித்திரம் போற்றும் சாமானிய மக்களின் முதல்வர் |
| 4 | ஜல்லிக்கட்டு |
| 5 | சரித்திர நாயகியின் ஆசியுடன் ஓராண்டு சாதனைகள் பகுதி 1 |
| 6 | சரித்திர நாயகியின் ஆசியுடன் ஓராண்டு சாதனைகள் பகுதி 2 |
| 7 | சரித்திர நாயகியின் ஆசியுடன் ஓராண்டு சாதனைகள் பகுதி 3 |
| 8 | உடலுக்கு உரம் |
| 9 | மெட்ரோ இரயில் சேவை |
| 10 | விவசாயிகளின் தோழர் |
| 11 | சுகாதார திட்டங்கள் |
| 12 | உயரவைக்கும் திட்டங்கள் உயர்கல்வித்துறை |
| 13 | நம்பிக்கை ஒளி |
| 14 | அம்மா இரு சக்கர வாகனம் |
| 15 | உடல் உறுப்பு தானம் |
| 16 | பால்வளத்துறை |
| 17 | தமிழ்நாடு தொழில் முதலீட்டாளர்களின் உலகம் |
| 18 | பாலங்கள் மற்றும் சாலைகள் |
| 19 | காவேரியை மீட்ட காவியத்தாயின் அரசு பகுதி 1 |
| 20 | காவேரியை மீட்ட காவியத்தாயின் அரசு பகுதி 2 |
| 21 | தாய்மை மற்றும் வரம் |
| 22 | பசுமை நாயகர் |

| வ. எண் | **படக்காட்சி செய்தி மலர்கள்** |
|---|---|
| 23 | மிரட்டிய கஜா புயல் விரட்டிய தமிழகம் |
| 24 | பொங்கல் பரிசு |
| 25 | அம்மா அரசின் சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு பகுதி 1 |
| 26 | அம்மா அரசின் சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு பகுதி 2 |
| 27 | அம்மா அரசின் சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு பகுதி 3 |
| 28 | அம்மா அரசின் சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு பகுதி 4 |

| வ. எண் | **குறும்பாடல்கள்** |
|---|---|
| 1 | **அரசின் ஓராண்டு சாதனைகள்**<br>**குறும்பாடல்கள் பகுதி 1**<br><br>1. ஸ்கூட்டர்<br>2. 108 செயலி<br>3. நீர்வளம் காக்கும் அரசு<br>4. மகளிர் வாழ்வாதாரம்<br>5. பாலங்கள்<br>6. மாற்றுத்திறனாளிகள்<br>7.ஆதிதிராவிடர் நலம் |

| | |
|---|---|
| | **அரசின் ஓராண்டு சாதனைகள்**<br>**குறும்பாடல்கள் பகுதி 2**<br>1. தமிழ்ச் செம்மல் விருது<br>2. விவசாயிகள்<br>3. ஆசிரியர் பணி நியமன ஆணை<br>4. எம் – சாண்ட்<br>5. நீராபானம்<br>6. மாணவர்களுக்கு மடிக்கணினி |
| 2 | **அரசின் ஈராண்டு சாதனைகள் குறும்பாடல்கள்**<br>1. இனிய பயணம்<br>2. பாவையர் போற்றும் பொற்கால ஆட்சி<br>3. தழைத்தோங்கும் தொழில்துறை<br>4. பொங்கல் பரிசு<br>5. மருத்துவ மகத்துவம்<br>6. உழவர் உயர்வு<br>7. மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சி<br>8. பயனளிக்கும் பிளாஸ்டிக் தடை |
| 3 | **குழந்தைகள் உரிமை மற்றும் பாதுகாப்பு –**<br>குழந்தைகள் பாதுகாப்பு |

# எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனமாக எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திகழ்கிறது. பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்கு கற்றுத் தருவதே இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், அகில இந்திய அளவில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சியை அளிக்கும் மூன்று முன்னோடி நிறுவனங்களில் ஒன்றாகும். மற்றவை, பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் மற்றும் கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஆகும்.

**பட்டப் படிப்புகள்**

மாண்புமிகு மேனாள் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க, அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட பட்டயப் படிப்புகள், **2016–2017** ஆம் கல்வியாண்டு முதல், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைகழகத்துடன் இணைந்து நான்காண்டு இளங்கலை காட்சிக்கலை பட்டப்படிப்புகளாக (Bachelor of Visual Arts) மாற்றப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

ஏப்ரல் **2018** வரை வழங்கப்பட்ட Diploma in Film Technology என்ற பட்டயத்திற்கு பதிலாக Bachelor of Visual Arts என்ற பட்டம் வழங்கப்படவுள்ளது. இதில்,

- இளங்கலைக் காட்சிக்கலை (ஒளிப்பதிவு) – Bachelor of Visual Arts (Cinematography)
- இளங்கலைக் காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) – Bachelor of Visual Arts (Digital Intermediate)
- இளங்கலைக் காட்சிக்கலை (ஒலிப்பதிவு) – Bachelor of Visual Arts (Audiography)
- இளங்கலைக் காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) – Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing)
- இளங்கலைக் காட்சிக்கலை (படத்தொகுப்பு) – Bachelor of Visual Arts (Film Editing)
- இளங்கலைக் காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்) – Bachelor of Visual Arts (Animation and Visual Effects) என ஆறு பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கல்வியாண்டிலும், ஆறு பாடப்பிரிவுகளிலும் 14 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப் படிப்புகளுக்குரிய கட்டணம் கல்விக் கட்டணமாக ரூ.15,000/–மும், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/–மும், மற்றும் வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/–மும் வசூலிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து முற்றிலும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்திர வரவு–செலவு ஒதுக்கீடு

இந்நிறுவன செலவினங்களுக்காக அரசு 2019–2020 நிதியாண்டில் ரூ.7.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

தமிழக அரசால் 2017–2018ஆம் நிதியாண்டு முதல் இறுதி ஆண்டு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு குறும்படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவி ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இக்குறும்படங்கள் தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி கல்வி இறுதியாண்டில், அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு குறும்படம் வீதம் 14 குறும்படங்கள் தயாரிக்க தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

## குறும்பட விருது

இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த

ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப்பதனிடுபவர் வல்லுநர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ''எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்பட விருது'' என்ற பெயரில் விருதும், தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம் மற்றும் ரூ.5,000/– பரிசுடன் நினைவுக் கேடயமும் வழங்கப்பட்டு வருகிறது.

## பிரிக்ஸ் திரைப்பட விருது

2016ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் திரைப்பட விழாவில், இந்நிறுவன மாணவர்களின் குறும்படங்களான ''ராணி'', ''கனா'', ''தி லாஸ்ட் லீஃப்'' மற்றும் ''ஷீப்ஸ் வேனீஷ்ட் இன் தி ஹேர்ட்'' ஆகியவை திரையிடப்பட்டது.

## அம்மா விருது

அம்மா விருது என்ற பெயரில் சிறப்பு விருது மற்றும் ரூ.10,000/– ரொக்கப்பரிசு, ''சென்னை சர்வதேச திரைப்பட விழா''வில் பங்கேற்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் குறும்படங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில் நடைபெற்ற 15வது சர்வதேச திரைப்பட விழாவில் ''டெய்சி'' என்ற பட்டயக் குறும்படமும், 2018–2019ஆம் ஆண்டில் நடைபெற்ற 16வது சர்வதேச திரைப்பட விழாவில் ''ஏஞ்சலினா'' என்ற பட்டயக் குறும்படமும் ''அம்மா'' விருதினை வென்றுள்ளது.

**மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி**

தமிழக அரசின் மூலம் ஆண்டுதோறும் ரூ.**150** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களின் குறும்படங்களுக்காகவும் மற்றும் செயல்முறை பயிற்சிக்காகவும் திரைத்துறைக்கு இணையாக நவீன தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில் எடுத்து மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

# திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

திரைப்படம் என்பது அனைத்து தரப்பு மக்களிடம் பொதுவாக வழக்கத்திலுள்ள எளிதாக செல்லக்கூடிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக திகழ்வதால் திரைப்படத்துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அரசு இத்துறையை ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாட்டில், தற்போது 977 திரையரங்குகள் கீழ்கண்டுள்ள இனங்களின்படி இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 953 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 13 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 08 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 03 |
| | மொத்தம் | 977 |

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதை முறைப்படுத்துவதற்கு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டப்பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும், திரையரங்குகளை அமைப்பதற்கு தடையின்மை சான்றும், திரைப்படங்களை

திரையிடுவதற்கு உரிமம் வழங்கும் தகுதி உடைய அதிகாரிகள் ஆவர். இணை ஆணையர், நிலநிருவாக ஆணையரகம் மற்றும் அரசு உள்துறை ஆகியோர் முறையே மேல் முறையீட்டு அதிகாரியாகவும், சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாகவும் செயல்பட இச்சட்டப்பிரிவுகளின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறையை ஒழுங்குபடுத்தவும் திரையரங்குகளில் திரைப்படம் காணவரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள், சுகாதாரமான சூழல், பாதுகாப்பு மற்றும் பிற நல அம்சங்கள் வழங்க உறுதி செய்யும் வகையிலும் தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ல் அரசு கடுமையான வழிமுறைகளை வகுத்துள்ளது. மேலும், இந்த விதிகளின் கீழ் அரசு பார்வையாளர்களின் அனுமதி கட்டணத்தை நிர்ணயிக்கிறது.

அதன்படி, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் மற்றும் தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர் சம்மேளனம் ஆகியவற்றின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அரசாணை (நிலை) எண்.762, உள் (சினிமா) துறை, நாள் 16.10.2017–இல், குளிர்ச்சாதன வசதி கொண்ட மல்டிபிளக்ஸ் திரையரங்குகளுக்கும், மாநகராட்சிகள்/நகராட்சிகள்/நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துகள் ஆகியவற்றில் அமைந்துள்ள, குளிர்ச்சாதன வசதி கொண்ட / குளிர்ச்சாதன வசதியில்லாத இதர திரையரங்குகளுக்கும், அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நுழைவுக் கட்டணத்தைத் திருத்தியமைத்து, அரசு ஆணையிட்டுள்ளது.

## கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை 1995–ம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995) முறைப்படுத்துகிறது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்படி, மாவட்ட மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8, மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் மாநகர காவல்துறை ஆணையாளர்கள், மாவட்டங்களைப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களை கேபிள் தொலைக்காட்சி சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமித்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வீடியோ சட்டமும் விதிகளும்

**1984**–ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில், திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகள்.

## அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின் கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது

சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு அலகும், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஆறு முதல் நிலை காவலர்களை உள்ளடக்கியதாகும். சென்னையைப் பொறுத்த வரை இரண்டு அலகுகள் இயங்கி வருகின்றன. அதில் அலகு 1–ல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், எட்டு முதல் நிலை காவலர்கள் மற்றும் இரண்டு இரண்டாம் நிலை காவலர்கள் உள்ளனர். அலகு 2–ல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், மற்றும் எட்டு முதல் நிலை காவலர்கள் உள்ளனர். 1957–ம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000–ம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2004–ம் ஆண்டு முதல் 2019–ம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன :–

## அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம் (2004 முதல் 2019 (31.05.2019 வரை)

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூ) | கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1151 | 1206 | 12,06,43,647 | 53 |
| 2005 | 813 | 950 | 9,44,55,557 | 13 |
| 2006 | 1153 | 1193 | 19,00,04,502 | 10 |
| 2007 | 1844 | 1866 | 17,38,74,360 | 9 |
| 2008 | 1968 | 1955 | 1,72,23,401 | 17 |
| 2009 | 2204 | 2201 | 8,32,59,759 | 31 |
| 2010 | 2690 | 2664 | 14,38,31,530 | 34 |
| 2011 | 2665 | 2648 | 10,78,74,745 | 9 |
| 2012 | 2858 | 2838 | 14,36,05,175 | 2 |
| 2013 | 3020 | 3004 | 36,57,57,107 | 2 |
| 2014 | 3320 | 3320 | 17,75,02,306 | 29 |
| 2015 | 3406 | 3406 | 11,65,23,631 | 51 |
| 2016 | 4893 | 4906 | 26,14,13,385 | 21 |
| 2017 | 5589 | 5591 | 51,24,96,880 | 13 |
| 2018 | 3102 | 3076 | 8,85,28,841 | 29 |
| 2019 (31.05.19 வரை) | 520 | 513 | 2,19,91,623 | 0 |

இது தவிர, வீடியோ திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **14/1982)** கீழும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களுக்காக, **2018–2019–**ம் ஆண்டில் **1** நபர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# தமிழரசு

தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் “தமிழரசு” இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. “தமிழரசு இதழ்”, அரசின் கொள்கைகள், எண்ணங்கள் மற்றும் திட்டங்கள், ஏழை, எளிய மக்களுக்காக அரசு செயல்படுத்தும் அனைத்து நலத்திட்டங்கள் ஆகியவற்றையும், திட்டங்களின் சாதனைகளையும் தொகுத்து இதழ் வடிவில் வெளியிடுவதால் இது ஒரு அச்சு ஊடகமாக பிரதிபலித்து வருகிறது.

‘தமிழரசு’ இதழில், அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள் மற்றும் அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், புதிய அறிவிப்புகள், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் உரைகள் மற்றும் துறைச் சார்ந்த அறிவிப்புகள், தமிழக அரசின் அளப்பரிய சாதனைகள், மக்கள் நலத்திட்டங்களின் செயல்பாடுகள், அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் உள்ள நலத்திட்ட உதவிகளைப் பெற்ற பயனாளிகளின் மன உணர்வுகளை, நன்றி உணர்வுகளை வெளிப்படுத்தும் வெற்றிக் கதைகள் ஆகியவை வெளியிடப்படுகின்றன.

மேலும், மகளிர் நலம், குடும்ப நலம், மருத்துவம், இரத்ததானம், எய்ட்ஸ் விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலம் சார்ந்த அரசின் திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், தமிழ் இலக்கிய வளத்தை உணர்த்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றுடன் தமிழரசு இதழ், வெளியிடப்பட்டு வருகிறது. மாதந்தோறும் **36,000**க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் தமிழிலும் **2,500**க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு வருகின்றன.

'தமிழரசு' தமிழ் மற்றும் ஆங்கிலம் இதழ்களின் விலை, ஒவ்வொன்றும் **20/–** ரூபாயாகவும், ஆண்டுச் சந்தா ஒவ்வொன்றுக்கும் **240/–** ரூபாயாகவும், ஆயுள் சந்தா, தமிழ் (10 ஆண்டுகளுக்கு) **2,000/–** ரூபாயாகவும், ஆங்கிலம் (10 ஆண்டுகளுக்கு) **2,400/–** ரூபாயாகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இணையதளத்தில் பதிவு செய்தல்

'தமிழரசு' மாத இதழினை தற்போது பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் அதிக அளவில் வாசிக்கின்றனர். மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் தமிழரசு அலுவலகத்திற்கு நேரிடையாக வந்து இதழினை வாங்கிச் செல்கின்றனர். இவ்வெண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருவதையொட்டி புதிய வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினை புதுப்பித்துக்கொள்ள ஏதுவாகவும்

கடந்த ஏப்ரல்–2018 முதல் **www.tamilarasu.org** என்ற இணையதளம் அறிமுகம் செய்யப்பட்டு, இணையதளத்தின் வாயிலாக சந்தாதாரராக பதிவுசெய்து தமிழரசு மாத இதழ்களை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பு வெளியீடுகள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் வாயிலாகப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

தமிழரசு இதழ் மட்டுமின்றி, தலைவர்கள், தியாகிகள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், தொலைபேசி சிறு கையேடு, அரசு விழா அழைப்பிதழ்கள் ஆகியவையும் அழகிய முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிடப்படுகின்றன.

**சாதனை மலர்கள்**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், நிலையான ஆட்சி – நிரந்தர வளர்ச்சி –

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் தலைமையிலான அரசின் 100 நாள் சாதனைகள், ஓராண்டுச் சாதனைகள் மற்றும் ஈராண்டுச் சாதனைகள் குறித்த விவரங்கள் துறைவாரியாகத் தொகுத்து சிறப்பு மலராக வெளியிடப்பட்டுள்ளது.

**மடிப்பேடுகள்**

அனைத்து மாவட்டங்களில் உள்ள நினைவகங்களுக்குத் "தமிழரசு" சார்பில் பல்வேறு தலைவர்கள் / தியாகிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பார்வையாளர்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

**ஈராண்டு சிறப்பு வெளியீடுகள்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் தலைமையிலான நல்லாட்சி ஈராண்டு நிறைவு செய்ததைப் போற்றிடும் வகையில், இத்துறையின் சார்பில் அச்சிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த **15.02.2019** அன்று நடைபெற்ற ஈராண்டுச் சாதனை விழாவில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வெளியீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | தலைப்பு |
|---|---|
| 1 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் மாவட்டங்களில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 1 |
| 2 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் மாவட்டங்களில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 2 |
| 3 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட பொன்மொழிகள் |
| 4 | அம்மா அரசின் – “சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு” என்ற தலைப்பில் ஈராண்டு சாதனை மலர் – தமிழ் பதிப்பு |
| 5 | Amma’s Government - Achievements of Two Years Will Continue For Many Years - Two Year Achievement - English Edition |
| 6 | அம்மா அரசின் – “சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு” என்ற தலைப்பில் – மாவட்டம் வாரியாக சாதனைகள் குறித்த சிறப்பு மலர் – தமிழ் பதிப்பு |
| 7 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் தொகுப்பு – 1 |
| 8 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் தொகுப்பு – 2 |
| 9 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரைகள் (12.02.2018 முதல் 08.01.2019 வரை) |

## பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்பு வெளியீடுகள்

**30.09.2018** அன்று சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் அப்பெருமகனார் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், பொன்மொழிகள் ஆகியவற்றின் தொகுப்புகள் மற்றும் அன்னாரின் நினைவினைப் போற்றி, பெருமை சேர்க்கின்ற வகையில் நூற்றாண்டு விழா சிறப்பு நினைவு மலர் ஆகியவை அச்சிட்டு வெளியிடப்பட்டன.

# பொருட்காட்சிப் பிரிவு

கேட்பதைவிட, பார்ப்பது மக்கள் மனதில் எளிதில் பதியும் என்பதால், அரசுப் பொருட்காட்சியை, பொதுமக்கள் குடும்பத்துடன் வருகை தந்து கண்டுகளித்துப் பயன்பெற ஏதுவாக விழாக்காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில், மாவட்டத் தலைநகரங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்கள் குறித்து, அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்துகொள்ளச் செய்கின்ற அரிய பணியினை, அரசு சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள் நிறைவேற்றி வருகின்றன.

கிராமம் மற்றும் நகர்புற மக்கள் அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களைக் கண்டுகளித்து, மனநிறைவுடன் தங்களது இல்லத்திற்குச் செல்வதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு

வேலைவாய்ப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், பத்து அரசுப் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், சுழற்சி முறையில், 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

2011 பிப்ரவரி முதல் 2019 மார்ச் வரை தமிழகத்தில் 71 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு அவற்றின் வாயிலாக அரசிற்கு நிகர வருவாயாக ரூபாய் 13 கோடியே 98 இலட்சத்து 83 ஆயிரம் ஈட்டப்பட்டுள்ளது.

## தனியார் பொருட்காட்சிகள்

முற்றிலும் வணிக நோக்குடன், வரைமுறைகளின்றி தனியாரால் நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முழுமையாக முறைப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படும் வகையில் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை வாயிலாக தனியார் பொருட்காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன.

## புதுடெல்லி மலர்ப்பேரணி

ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று தொடர்ந்து முதல் பரிசு பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பங்கேற்பதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள்விழாவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில் செய்தித்துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி அமைப்பதுடன், அரசின் பல துறைகளின் சார்பிலான அலங்கார ஊர்திகள் வடிவமைப்பு மற்றும் அணிவகுப்பு ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி **2012** மற்றும் **2019** ஆண்டுகளில் முதல் பரிசும், **2013, 2014, 2015, 2016** ஆகிய ஆண்டுகளில் இரண்டாம் பரிசும், **2017** மற்றும் **2018** ஆம் ஆண்டுகளில் மூன்றாம் பரிசும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**2019**ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில், தமிழ்நாடு அரசின் சார்பில் மகாத்மா காந்தி **1921**ஆம் ஆண்டு அரையாடை மட்டுமே அணிவது என மதுரையில் முடிவெடுத்த நிகழ்வினை விளக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டது. மேலும், ஊர்தியுடன் இணைந்து வந்த செய்தி மக்கள் தொடர்புத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட கரகாட்டக் கலைநிகழ்ச்சிக் குழு அனைவரின் பாராட்டுதல்களை பெற்று அகில இந்திய அளவில் முதல் பரிசு பெற்று, தமிழகத்திற்குப் பெருமையை சேர்த்தது.

## அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும், அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சியில், செய்தித்துறை பங்கேற்று பொது மக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்ற வகையிலும் தனி அரங்கு அமைத்து பாராட்டுதல்களை பெற்று வருகிறது.

## புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

தமிழ்நாடு அரசு சார்பில், புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று, தமிழக அரசின் அனைத்துத் துறைகளின் திட்டங்கள், கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்களை அமைத்து தமிழகத்தின் திட்டங்கள் வாயிலாக சாதனைகள் மற்றும்

பெருமைகளை அனைத்து மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் அரங்குகளை சிறப்பாக அமைத்து வருகிறது.

இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்களுக்குச் சந்தையும் ஏற்படுத்தப்படுகிறது. மேலும், இப்பொருட்காட்சிகள் வாயிலாக, பெரும்பான்மையோருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கவும் வழி வகை செய்யப்படுகிறது.

2018ஆம் ஆண்டு பங்குபெற்றதில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்கிற்கு சிறந்த அரங்கு என்ற சான்று வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஒன்றியங்களில் கண்காட்சிகள்**

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் சென்னையை தவிர்த்து 31 மாவட்டங்களில் உள்ள, 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனையை விளக்கும் வகையில், சிறு கண்காட்சியினை நடத்த, தமிழக அரசு ஆணையிட்டவாறு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூபாய் 10,000/– வீதம், மொத்தம் ரூபாய் 38.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011–2012ஆம் நிதி ஆண்டில் இருந்து சிறு கண்காட்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

**புகைப்படக் கண்காட்சி**

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழகத்தில் உள்ள **32** மாவட்டங்களிலும், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை, ஆண்டுதோறும் மாவட்டத் தலைநகரங்களில் நடத்த, தமிழக அரசு ஆணையிட்டவாறு, **2011–2012**ஆம் நிதி ஆண்டிலிருந்து தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம் ரூ.5000/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது

நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம் ரூ.**2000/–** லிருந்து ரூ.**5000/–** ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

## மின்னணு விளம்பர வாகனம்

அரசுப் பொருட்காட்சி நடைபெறும் இடங்களில் பொருட்காட்சி நடைபெறுவது தொடர்பாக விளம்பரம் மேற்கொள்வதற்காக, பொருட்காட்சிப் பிரிவிற்கு ஒரு மின்னணு விளம்பர வாகனம் (LED VAN) வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பொருட்காட்சி நடைபெறும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் பொருட்காட்சி நடைபெறுவதை அறிந்து கொள்ள இது ஒரு அரிய வாய்பாக உள்ளது.

## மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் செயல்படும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இன்றியமையாத அங்கமாகும். அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லும் சிறப்பான பணிகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி), உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (விளம்பரம்) மற்றும் தேவையான ஊழியர் கட்டமைப்புடன் இயங்கி வரும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அரசினால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு செல்லும் பணியை, சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. மேலும் அரசின் திட்டங்கள் அனைத்தும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், மின்னணு விளம்பர வாகனம் படக்காட்சிகள், ஒளிப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, களவிளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர, மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு விழாக்களுக்கான முன்னேற்பாடு, செய்தியாளர் சந்திப்பு மற்றும் பயண ஏற்பாடு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் வாயிலாக விளம்பரப்பணி, பல்துறை விளக்கக் கண்காட்சிகள், வரலாற்றுத் தலைவர்களின் நினைவகங்களைப் பராமரித்தல் உள்ளிட்ட பல முக்கியப் பணிகளையும் மேற்கொண்டு, அரசின் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பணியாற்றுகின்றனர்.

## செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்தி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

## சென்னை – மாநிலச் செய்தி நிலையம்

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் இயங்கி வந்த மாநிலச் செய்தி நிலையம் 2009ஆம் ஆண்டில், புதிய கலைவாணர் அரங்கம் கட்டும் பணிகள் காரணமாக திருவல்லிக்கேணி மகாகவி பாரதியார் நினைவு இல்லத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு 14.12.2009 முதல் செயல்பட்டு வந்தது. மாநிலச் செய்தி நிலையத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த மேனாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய கலைவாணர் அரங்கத்திற்கு அருகிலேயே ரூ.2 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டடம் கட்ட ஆணையிட்டு 14.02.2016 அன்று புரட்சி தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாநிலச் செய்தி நிலையம் தினமும் காலை 10.00 மணி முதல் 5.45 மணி வரை நூலகத்துடன் செயல்பட்டு வருகிறது. இங்கு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, அரசியல், அறிவியல், சட்டம், மருத்துவம், பொறியியல், ஆய்வுக் கட்டுரைகள், ஆன்மிகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சுமார் 60,200 நூல்கள் உள்ளன. மேலும், தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வார இதழ்கள் போன்ற நூல்கள் பொதுமக்கள் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பெற்று

சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு அரசின் மேற்கோள் பணிக்காக அவ்வப்போது தேவைப்படும் நூல்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியரின் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் மற்றும் பள்ளியில் நடத்தப்படும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் மாநிலச் செய்தி நிலையத்தின் நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். மேலும், போட்டித்தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு வகை போட்டித் தேர்வு நூல்கள் உள்ளன.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இதழ்களும், காலமுறை வெளியீடுகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

## மேம்படுத்தப்பட்ட நவீன நூலகம்

மாநிலச் செய்தி நிலையத்திற்கு வருகை தரும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் பொது மக்களுக்குப் பெரிதும் உதவிடும் வகையில், **2018–2019**ஆம் நிதியாண்டில் **3.60** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகல் எடுக்கும் இயந்திரம், புத்தக அலமாரி உள்ளிட்ட வசதிகளுடன் நூலகத்திலுள்ள புத்தகங்களைக் கணினியில் பதிவு செய்து விரைவாகவும், எளிதாகவும் தேடி எடுத்திடும் வகையில், நவீன மென்பொருள்களுடன் கூடிய இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டு நூல்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

**பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவு**

இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்கள் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் **1867**–ன்படி, புத்தகப் பதிவாளராகச் செயல்பட்டு வருவதன் அடிப்படையில், பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

## நிறைவுரை

**மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், கடந்த **2011**ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றியைத் தொடர்ந்து, **2016**ஆம் ஆண்டிலும் தமிழக மக்களின் அமோக ஆதரவுடன் தொடர்ச்சியாக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், நம்மை விட்டுப் பிரிந்தாலும், இன்னும் பல நூறு ஆண்டுகள் மக்கள் நலம் பேணும் நல்லாட்சி தொடர ஆசி வழங்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களது தலைமையிலான தமிழ்நாடு அரசு, மக்கள் நலம் காத்திடும் மகத்தான பணிகளை தினம் தினம் ஆற்றி வருகிறது.

இப்பணிகளால் விளைந்திடும் பயன்களைத் துய்த்திட முழு உரிமை பெற்றுள்ள தமிழக மக்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து, நாட்டு மக்களிடையே ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஓங்கி வளர்ந்திடவும், ஏழை எளியோரின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு சமூக மேம்பாடு கண்டிடவும், செய்தி மக்கள் தொடர்புத்துறை, உற்சாகத்துடனும் உத்வேகத்துடன் ஊக்கமுடனும் ஒருங்கிணைந்து தொடர்ந்து செயலாற்றும்.

**கடம்பூர் ராஜு**

செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

# இணைப்பு

## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2019-2020

**தொகை**
**(ரூபாய் ஆயிரத்தில்)**

| | | 2017-2018 கணக்குகள் | 2018-2019 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2018-2019 திருத்த மதிப்பீடு | 2019-2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 62,23 | 70,00 | 65,00 | 65,00 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 131,04,92 | 85,10,59 | 106,18,52 | 89,34,45 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 1,29,88 | 1,42,20 | 1,56,00 | 1,56,00 |
| 2250 | ஏனைய சமூகப்பணிகள் | 11,90 | 17,56 | 17,98 | 19,09 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | --- | 20,00,00 | 20,00,00 | 1 |
| | **மொத்தம்** | **133,08,93** | **107,40,35** | **128,57,50** | **91,74,55** |





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி

அவர்களின்

சீரிய தலைமையில்

மாண்புமிகு **அம்மா** அரசின்

# “சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு”

“தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதிதான், தமிழக மக்கள் எங்களுக்கு அளித்த ஆட்சிப் பொறுப்பு”
- புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஈராண்டில் 11,912 கோப்புகளுக்கு ஒப்புதல் அளித்ததன் மூலம் எண்ணிலடங்கா மக்கள் நலப் பணிகள்

“எந்த அரசு மக்கள் பக்கம் இருக்கிறதோ, அந்த அரசின் பக்கம் மக்களும் இருப்பார்கள்”
- எடப்பாடி K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

### சிறப்பு நிதியுதவி

1,200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தமிழ்நாடு முழுவதும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 60 லட்சம் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு சிறப்பு நிதியுதவியாக தலா ரூபாய் 2,000

### உலக முதலீட்டாளர்கள் மாநாடு

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3,00,431 கோடிக்கு மேல் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். 10.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

### பிளாஸ்டிக் பொருட்கள் தடை

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்களுக்கு 1.1.2019 முதல் தடை

### பொங்கல் பரிசு

தமிழ்நாட்டில் 1,98,54,617 குடும்பங்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட பொங்கல் பரிசு பெட்டகத்துடன் ரூபாய் 1000

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

- **ரூ.1,547 கோடி செலவில் 5,063 குடியிருப்புகள்**
- ரூ.95 கோடி செலவில் மாதவரத்தில் துணைப் புறநகர் பேருந்து முனையம்
- **சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து குழுமச் சட்டம்** (CUMTA) **மற்றும் சட்ட விதிகள் 2019 அறிவிக்கை**
- குடியிருப்பு / வணிக கட்டடங்களுக்கு தளப்பரப்புக் குறியீடு (FSI) 1.5 லிருந்து 2 ஆக உயர்த்தி ஆணை வெளியீடு
- **தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019 வெளியீடு**

### கூட்டுறவு மற்றும் உணவுத்துறை

- ரூ.13,587 கோடி மதிப்பீட்டில் கூட்டுறவு பயிர்க் கடன் 22,08,252 விவசாயிகள் பயன்
- **ரூ.1,089.78 கோடி மதிப்பிலான 7,82,598 மெட்ரிக் டன் ரசாயன உரங்கள் விற்பனை**

### திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை

- சென்னை மெட்ரோ இரயில் கட்டம்–I முழுமையடைந்து 45 கி.மீ. மெட்ரோ இரயில் வழித்தடங்களில் பயணிகள் சேவை தொடக்கம் மற்றும் 118.9 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – IIக்கு ரூ.69,180 கோடிக்கு திட்டம் தயாரிப்பு
- **கோயம்புத்தூர் நகருக்கு மெட்ரோ இரயில் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவக்கம்**
- சென்னை விமான நிலையம் முதல் காஞ்சிபுரம் மாவட்டம் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையம் வரை மெட்ரோ இரயில் இணைப்புக்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு

### நிதித்துறை

- **ரூ. 92.48 கோடி செலவில் ஓய்வூதிய தாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 27,150 பேர் பயன். இத்திட்டம் நான்கு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு**
- அரசு பணிகள் திறம்பட நடைபெற ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்

### நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை

- **ரூ.8,526.50 கோடி செலவில் 11,236 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டன. 586 சிறு பாலங்கள், 116 பாலப் பணிகள் மற்றும் 3 உயர்மட்ட ஆற்றுப்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன**
- ரூ.1,393.48 கோடி செலவில் 5,377 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிப்பு
- **ரூ.644 கோடி செலவில் 20 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் ரூ.58.05 கோடி செலவில் திருவொற்றியூர் மாட்டுமந்தை அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டுள்ளன**

### தமிழ்நாடு அரசு பெற்ற விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- **ஒட்டுமொத்த செயல்பாடு, சட்டம் ஒழுங்கு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பிரிவுகளில், இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த மாநிலமாக இந்தியா டுடே பத்திரிகை தேர்வு செய்து 4 விருதுகளை வழங்கியது**
- கடந்த ஐந்து வருடங்களில் 4 முறை உணவு தானிய உற்பத்தி உயர்வுக்காக, இந்திய அரசின் உயர் விருதான கிருஷி கர்மான் விருது பெறப்பட்டது
- **பெங்களூருவைச் சேர்ந்த பொது விவகாரங்கள் மையம் என்ற அமைப்பு சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டிற்கான தனது அறிக்கையில் ஆளுமையில் இரண்டாவது மாநிலமாகத் தமிழ்நாட்டை தேர்வு செய்தது**
- சிறந்த மனித ஆற்றல், பலமான உட்கட்டமைப்பு வசதிகள், மிகைமின் உற்பத்தி மற்றும் இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்குகிறது
- **தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு முதலிடம்**
- தேசியப் பயன்பாட்டு பொருளாதார ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில், 2018ஆம் ஆண்டில் தொழில் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை இரண்டாவது இடத்தில் தரவரிசைப்படுத்தியுள்ளது
- **பெரியகுளம் காவல் நிலையம் இந்தியாவிலேயே 8வது சிறந்த காவல் நிலையமாகத் தேர்வு**
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினை திறமையாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் 5 விருதுகள்
- **பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கியதற்காக விருது**
- மரபுசாரா எரிசக்தித் துறைக்கான கட்டமைப்புகளைச் சிறப்பாக உருவாக்கியதற்காக மத்திய அரசின் விருது
- **இறந்தவர்களின் உடல் உறுப்புக்களைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வதில் முதன்மை மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதை தமிழ்நாடு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பெற்று சாதனை**
- தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாக செயல்பட்டமைக்காக மத்திய அரசிடமிருந்து 11 விருதுகள்
- **கோவை, ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளுக்கு சிறந்த நிர்வாகத்திற்கான தேசிய மற்றும் பன்னாட்டு விருதுகள்**
- திடக்கழிவு மேலாண்மைக்காக 2017ஆம் ஆண்டிற்கான ஸ்காச் ப்ளாட்டினம் விருது
- **தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒருங்கிணைந்த மேலாண்மைத் தகவல் முறைக்கான மத்திய அரசின் விருது**
- "பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்தியமைக்காக இந்தியாவின் முதன்மை மாநிலத்திற்கான விருது.

### வேளாண்மைத்துறை

- 18.19 லட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4,657 கோடி இழப்பீட்டுத் தொகை
- **ரூ.1,671.18 கோடி செலவில் 2.55 லட்சம் எக்டர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டம்**
- ரூ.213.74 கோடி செலவில் "குறுவை மற்றும் சம்பா தொகுப்புத் திட்டம்". 3,93,352 விவசாயிகள் பயன்
- **ரூ.123.63 கோடி செலவில் மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தின் கீழ் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஒருங்கிணைப்பு**
- வேளாண் சேவைக்காக உழவன் கைபேசி செயலி அறிமுகம்

### சட்டத்துறை

- **சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, காஞ்சிபுரம் மாவட்டம் புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் பட்டறைப் பெரும்புதூர் ஆகிய இடங்களுக்கு மாற்றம்**
- ரூ.293.3 கோடி செலவில் சட்டக் கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள்

### தொழில் துறை

- **சிப்காட் நிறுவனம் மூலம் 243 தொழில் நிறுவனங்கள் வாயிலாக ரூ.4,252 கோடி முதலீடுகளை ஈர்த்து, 37,573 நபர்களுக்கு வேலைவாய்ப்பு**

### பணியாளர் நலன் (ம) நிருவாக சீர்திருத்தத்துறை

- **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 22,533 நபர்கள் நியமனம்**
- "லோக் ஆயுக்தா" சட்டம் இயற்றப்பட்டது
- **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் குருப் I-A, I-B பணியிட தேர்வுகளுக்கு SC/ST, BC, MBC மற்றும் DNC பிரிவினருக்கு வயது வரம்பு 35லிருந்து 37 ஆகவும் இதர பிரிவினருக்கு 30லிருந்து 32 ஆகவும் உயர்வு**

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

- ரூ.2,066 கோடி மதிப்பீட்டில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் 1,340 சாலைகள் மற்றும் 61 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 50.90 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.9,151 கோடி ஊதியம்**
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.11,600 கோடி கடனுதவி
- **ரூ.193.63 கோடி செலவில் 87,205 மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம், நடப்பாண்டில் ரூ.252.50 கோடி செலவில் ஒரு லட்சம் மகளிருக்கு வழங்கப்படும்**

# “சாதனைகள் ஈராண்டு தொடரும் பல்லாண்டு”

## உள்துறை

- **22,050 சீருடைப் பணியாளர்கள் நியமனம்**
- ரூ.752.46 கோடி செலவில் 136 காவல் நிலையங்கள், 4,104 காவலர் வாடகைக் குடியிருப்புகள், 98 இதர காவல் துறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன
- **ரூ.10 கோடி செலவில் காவலர் மன அழுத்தத்தினைப் போக்கிட காவலர் நிறைவாழ்வு பயிற்சி**
- ரூ.409.15 கோடி செலவில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள்

## பொதுப்பணித்துறை

- **தமிழ்நாடு அரசின் தொடர் முயற்சிகளினால் காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பு**
- ரூ.1,652 கோடி மதிப்பீட்டில் அத்திக்கடவு அவிநாசி நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் (ம) குடிநீர் வழங்கும் திட்டம்
- **ரூ.427.76 கோடி மதிப்பீட்டில் ஆதனூர் – குமாரமங்கலத்தில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை**
- ரூ.2,962 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டம்
- **ரூ.750 கோடி மதிப்பீட்டில் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**
- ரூ.387 கோடி மதிப்பீட்டில் காவேரி ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் புதிய கதவணை

## பள்ளிக்கல்வித்துறை

- தொடக்கநிலை, இடைநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை ஆகிய வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் முறையே 99.88, 99.20, 90.72, 71.45 ஆக உயர்வு
- **ரூ.1,223.35 கோடி செலவில் 70.59 லட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா நான்கு இணை சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் புத்தகப் பைகள்**
- 250 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 202 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்வு மற்றும் 20 புதிய தொடக்கப் பள்ளிகள்
- **மாணவர்களின் சந்தேகங்கள் மற்றும் விரைவான குறை தீர்வுக்கு கட்டணமில்லா தொலைபேசி எண் 14417**
- 2,437 ஆசிரியர்கள் மற்றும் 793 ஆசிரியரல்லாதோர் பணி நியமனம்

## நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை

- **ரூ.2,722 கோடி மதிப்பீட்டில் 11 மாவட்டங்களில் 55.60 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**
- ரூ.1,101.43 கோடி மதிப்பீட்டில் வெள்ளப் பாதிப்பைத் தடுக்க அடையாறு மற்றும் கூவம் ஆற்றில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி
- **ரூ.963.19 கோடி மதிப்பீட்டில் சென்னையில் சீர்மிகு திட்டத்தின் கீழ் 37 திட்டப் பணிகள்**
- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 4,50,325 தனி நபர் குடியிருப்புக் கழிவறைகள்
- **ரூ.73.08 கோடி செலவில் சென்னை எம்.ஆர்.சி நகரில் நகர நிர்வாக அலுவலகக் கட்டடம்**
- ரூ.2,000 கோடி செலவில் சென்னையில் வாகன நிறுத்த வசதிகளுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டம்
- **ரூ.5,259.10 கோடி செலவில் குப்பைக் கொட்டும் இடங்களை சுத்திகரிப்பு செய்து மீட்டெடுத்து கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் அலகினை அமைக்கும் திட்டம்**

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

- **நிருவாக வசதிக்காகவும் மற்றும் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையையும் ஏற்று விழுப்புரம் மாவட்டத்தை பிரித்து கள்ளக்குறிச்சியை தலைமை இடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கம்**
- சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 29,45,445 பயனாளிகளுக்கு ஓய்வூதியம். இதில் 2,76,266 புதிய பயனாளிகள்
- **ஒரு புதிய வருவாய் கோட்டம் மற்றும் 14 புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கம்**
- இணையதள பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ் 18,77,518 மனுக்கள் மீது தீர்வு
- **கஜா புயலால் ஏற்பட்ட பயிர் சேதங்கள், வீடுகள் மற்றும் குடிசைகள், மீனவர்களின் படகுகள் என உடனடி நிவாரணப் பணிகளுக்காக ரூ.2,361.41 கோடி**
- ரூ.1,700 கோடி திட்ட மதிப்பீட்டில் கஜா புயலால் பாதிப்படைந்த மாவட்டங்களில் சேதமடைந்த குடிசைகளுக்கு பதிலாக ஒரு லட்சம் வீடுகள்
- **மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் கோட்டம்**
- வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்களுக்கு விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத் தொகை ரூ.250 கோடி ஒதுக்கீடு
- இ–அடங்கல் செயலி தொடக்கம்

## உயர்கல்வித்துறை

- **3,52,136 முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 725.10 கோடி வழங்கப்பட்டுள்ளது**
- சிவ் நாடார் மற்றும் சாய் தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி
- **மாணவர்கள் சேர்க்கை விகிதத்தில் 48.6 சதவிகிதம் பெற்று இந்திய அளவில் முதலிடம்**
- இராமேஸ்வரத்தில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- **அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பிற பொறியியல் கல்லூரிகளுக்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் கற்பித்தலுக்கு தேவைப்படும் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் சர்வதேச தரத்தில் உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல்**

## மக்கள் நல்வாழ்வுத்துறை

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சமாக உயர்வு. ரூ.2127.17 கோடி செலவில் 13.90 லட்சம் நபர்களுக்கு சிகிச்சை
- **108 அவசர கால ஆம்புலன்ஸ் திட்டத்தில் 6.20 லட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 24.55 லட்சம் நபர்கள் பயன்**
- ரூ.1,634 கோடி செலவில் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் துவக்கம்
- **சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.91 கோடி செலவில் புறநோயாளிகள் பிரிவு மற்றும் ரூ.16.11 கோடி செலவில் குழந்தைகள் கேத் லேப் கருவி**
- தாய் சேய் நல வாகன சேவை 102 தொடக்கம்

## எரிசக்தித்துறை

- **கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 3.32 லட்சம் மின் கம்பங்கள், 42 மிக உயரழுத்த மின் கோபுரங்கள், 32,100 கி.மீ. மின் வழித் தடங்கள் மற்றும் 1,655 மின் மாற்றிகள் மிகக் குறுகிய காலத்தில் சீரமைக்கப்பட்டன**
- 1,643 மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றாலைகள் மூலம் 8,364 மெகாவாட் மின் உற்பத்தி
- **16.15 லட்சம் புதிய மின் இணைப்புகள் மற்றும் ஒரு நாள் மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் 5.85 லட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன**
- 112 கிலோவாட் தாழ்வழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 52,465 புதிய மின் இணைப்புகள்
- **தட்கல் விரைவுத் திட்டத்தின் கீழ் 46,752 விவசாய மின் இணைப்புகள்**
- காற்றாலை நிறுவு திறன் 8,364 மெகாவாட்டாகவும், சூரிய மின் சக்தி நிறுவு திறன் 2,445 மெகாவாட்டாகவும் உள்ளது

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

- உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.32,206 கோடி முதலீடு. 12,360 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- **32,586 பயனாளிகளுக்கு அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்**
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வாயிலாக வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் வர்த்தக மற்றும் முதலீட்டு மேம்பாட்டு மையம்

## புதிய கொள்கைகள் வெளியீடு

- **தமிழ்நாடு சுற்றுச்சூழல் கொள்கை, 2017**
- மின்னாளுமை கொள்கை, 2017
- **தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கை, 2018**
- தமிழ்நாடு இளைஞர் கொள்கை
- **தமிழ்நாடு வனக் கொள்கை, 2018**
- தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை, 2018
- **தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை, 2018**
- தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்பு கொள்கை, 2019
- **தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை, 2019**

## இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை

- **அரசு / பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்பில் திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு 3% இட ஒதுக்கீடு**
- சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை ரூ.9.73 கோடி

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

- **கொத்தடிமை முறையிலிருந்து 558 தொழிலாளர்கள் மீட்பு. ரூ.93.15 லட்சம் நிவாரண உதவி**
- 8,48,332 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.347.91 கோடி நிதியுதவி

## கைத்தறி, கைத்திறன் மற்றும் கதர்த்துறை

- கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரம் மூலம் 2,23,680 நெசவாளர்கள் பயன்
- **கோயம்புத்தூரில் பன்னாட்டு ஜவுளி கண்காட்சி**

## சுற்றுலா மற்றும் அறநிலையங்கள் துறை

- 241 திருக்கோயில்களுக்கு "ஒரு கால பூஜை" திட்டம் விரிவாக்கம் மற்றும் 1,225 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு
- **ரூ. 57.69 கோடி செலவில் ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவித் திட்டத்தில் சிறப்புச் சுற்றுலா கட்டமைப்புத் திட்டம்**
- ரூ.100 கோடி தொடக்க முதலீட்டில் சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துதல்

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

- **சாயப்பட்டறை கழிவுகள் பவானி ஆற்றில் கலப்பதை தடுக்க நடவடிக்கை**
- மலையேற்றம் தொடர்பாக புதிய விதிமுறைகள்

## சமூக நலத்துறை

- **3,473 குழந்தைத் திருமணங்கள் தடுப்பு**
- துயருற்றிருக்கும் பெண்களுக்கு உதவ இலவச தொலைபேசி சேவை எண் ‘181’
- **திருநங்கைகள் சொந்தத் தொழில் தொடங்குவதற்கான நிதிக்கான மானியம் ரூ.20,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்வு**
- "பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக திருவண்ணாமலை மாவட்டத்திற்கு தேசிய விருது
- **2019 – 20 ஆம் ஆண்டிற்கு ரூ.98 கோடி செலவில் காய்கறி, தாளிதப் பொருட்கள், எரிபொருள் ஆகியவற்றிற்கான உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்குதல்**

## தகவல் தொழில்நுட்பவியல் துறை

- **ரூ.59.85 கோடி செலவில் திருச்சிராப்பள்ளியில் "தமிழ்நாடு பேரிடர் தரவு மீட்பு மையம்"**
- **ரூ.21.39 கோடி செலவில் எல்காட் மற்றும் சி–டாக் (C-DAC) வாயிலாக தமிழ்நாடு இணைய பாதுகாப்பு கட்டமைப்பு நிறுவப்படும்**
- **ரூ.23 கோடி செலவில் சென்னையில் நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் அமைக்கப்படும்**

## ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை

- கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ. 1,000 ஆகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கு ரூ. 900 ஆகவும் உணவுக் கட்டணம் உயர்வு
- **ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சாலை, குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்திட ரூ.100 கோடி அறிவிப்பு**

## சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை

- 2018–19 ஆம் ஆண்டு முதல் 11ஆம் வகுப்பிலேயே மடிக்கணினி
- **2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,923 கோடி மதிப்பீட்டில் 15.54 லட்சம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படும்**

## போக்குவரத்துத்துறை

- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 13ஆவது ஊதிய ஒப்பந்தம்
- **1400 புதிய பேருந்துகள் இயக்கம்**
- சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் ரூ.140 கோடி செலவில் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில் மின்சார பேருந்து அறிமுகம்
- **ஜெர்மன் வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் ரூ.5,890 கோடி செலவில் 12,000 பேருந்துகள் மற்றும் 2,000 புதிய மின்சார பேருந்துகள்**

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- **ரூ.306.07 கோடி மதிப்பீட்டில் 1,80,868 மனவளர்ச்சி குன்றியவர்கள், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை**
- ரூ.19.50 கோடி செலவில் தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட 2,872 மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியினால் இயங்கும் சிறப்பு நாற்காலிகள்
- **ரூ.23.74 கோடி செலவில் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டுள்ள 4,264 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்**

## தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை

- **ரூ.50.8 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மெரினா கடற்கரையில் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம்**
- ரூ.2.52 கோடி செலவில் சென்னை காமராசர் சாலையில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவு வளைவு
- **அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை ரூ.2,500 ஆக உயர்வு. உதவித்தொகை பெற ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000 ஆக உயர்வு**
- ரூ.5 கோடி செலவில் தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் வெளிமாநில கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படும்
- **ரூ.1 கோடி செலவில் தமிழில் உள்ள அனைத்து சொற்களையும் தொகுத்து சொற்குவை எனும் பெயரில் இணையத்தில் வெளியிடுதல்**
- ரூ.2.15 கோடி செலவில் கடலூர் மாவட்டத்தில் இராமசாமி படையாச்சியார் முழு உருவ வெண்கல சிலையுடன் கூடிய நினைவு மண்டபம் மற்றும் சிதம்பரத்தில் ரூ.1.15 கோடி செலவில் சுவாமி சகஜானந்தா மணிமண்டபம்
- **ரூ.1.50 கோடி செலவில் கோயம்புத்தூர் மாவட்டம், வையம்பாளையத்தில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம்**
- பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில், பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 லட்சமாக உயர்வு. மருத்துவ உதவித் தொகை ரூ.1 லட்சமாக உயர்வு

## கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை

- **ரூ.62.43 கோடி செலவில் 15,661 நபர்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள்**
- ரூ.315.03 கோடி செலவில் 2,45,199 நபர்களுக்கு விலையில்லா ஆடுகள்
- **ரூ.68.75 கோடி செலவில் 77,000 பெண் பயனாளிகளுக்கு புழக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டம், 199 கறிக்கோழிப் பண்ணைகள் மற்றும் 2,861 நாட்டுக்கோழிப் பண்ணைகள்**
- மீன்பிடி தடைகால நிவாரணம் ரூ.5,000 ஆக உயர்வு. 3,16,183 மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 158 கோடி நிவாரணம்
- **மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கு நிவாரண உதவி ரூ.5,000. 2,72,368 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.136.18 கோடி நிவாரணம்**
- சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் கத்தார் ஆகிய வெளிநாடுகளில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை
- **ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு வானிலை எச்சரிக்கை தகவல்களை வழங்க Satellite Phone, NAVIC மற்றும் NAVTEX என்ற தொலை தொடர்பு கருவிகள்**
- **ரூ.420 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் ரூ.116 கோடி செலவில் கடல் அரிப்புத் தடுப்பான்கள்**
- **ரூ.496 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டம் தலைவாசல் பகுதியில் 900 ஏக்கர் பரப்பளவில் உலகத் தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய பல்துறை, உறைவிந்து மற்றும் பல்நோக்கு நவீன கால்நடை பூங்கா அறிவிப்பு**

## பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை

- தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் அறநிலைப் பொறுப்பாட்சிகள் (ம) நிலைக் கொடைகள் நிருவாகக் குழுமம் உருவாக்கம்
- **ரூ.6 கோடி மாநில அரசு நிதியுதவியில் 3,765 இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணம்**
- ரூ.1.20 கோடி நிதியுதவில் 600 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம்

## பொது மற்றும் மறுவாழ்வுத்துறை

- **விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ரூ.13,000 ஆகவும், வாரிசுதாரர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் ரூ.6,500 ஆகவும் உயர்வு**
- உயிர்நீத்த முன்னாள் படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியத்துடன் குடும்ப ஓய்வூதியமாக இரட்டைக் குடும்ப ஓய்வூதியம்

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை

- **இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அமைப்பு**
- எளிமையான மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகத்திற்கு ஸ்டார் 2.0 (Simplified and Transparent Administration of Registration) திட்டம் துவக்கம்
- **பதிவுத் துறையில் ஆவணப் பதிவு நடைமுறையினை முற்றிலும் கணினிமயமாக்கும் நோக்குடன் ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் உருவாக்கம்**
- நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு (அ) மறுகட்டமைப்பு தொடர்பான சொத்துப் பரிமாற்றங்களுக்கான முத்திரைத் தீர்வை சொத்தின் சந்தை மதிப்பில் 2 சதவிகிதம் அல்லது பங்குகளின் ஒட்டுமொத்த சந்தை மதிப்பில் 0.6 சதவிகிதம், இதில் எது அதிகமோ அது நிர்ணயிக்கப்படும்

செ.ம.தொ.இ/194/வரைகலை/2019

வெளியீடு : இயக்குநர். செய்தி மக்கள் தொடர்புத் துறை



**உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம், வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்**



இராமசாமி படையாட்சியார் மணிமண்டபம், கடலூர் மாவட்டம்




டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவு, காமராஜர் சாலை, சென்னை